RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s61

# சைவ அடியார்களும் பஞ்சபூதத் தல வழிபாட்டு முறைகளும்

**மு. பாலமுருகன் [அ, *], க. அமுதா [அ]**

[அ] தமிழ் உயராய்வு மையம், அழகப்பா அரசு கலைக் கல்லூரி, காரைக்குடி-630003, தமிழ்நாடு, இந்தியா

# Saiva devotees and Pancha Bhoota Temples Worship

**M. Balamurugan [a, *], K. Amudha [a]**

[a] Tamil Research Centre, Alagappa Goverment Arts College, Karaikudi- 630003, Tamil Nadu, India

* Corresponding Author: m.bala5690@gmail.com

Received: 02-09-2021
Revised: 25-03-2022
Accepted: 06-04-2022
Published: 10-05-2022

Check for updates

**ABSTRACT**

Devotional literatures helped to spread the vegan and Vaishnava religions during the period when Palki was growing in Tamil literature. Devotional literature considered the Pancha Bhootas to be a form of deity. It is said that the Lord is the Panchaputra. In the Twelve Trimesters the messages that the Lord has the attributes of the five elements of land, water, air, fire, and sky are subtly highlighted. The Saiva devotees went to the Pancha Bhootas site and worshiped the Lord. These temples were the backdrop for the construction of the temples. The gist of this article is that it highlights the cults of the Saiva devotees in a way that illustrates the glories and specialties of each temples.

**Keywords:** Religions, Pancha Bhootas, Temples, Literature, Thevara Songs.

## முன்னுரை

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றும் 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பவை நம் முன்னோர் மொழிந்த பழமொழிகள் ஆகும். தமிழகத்து மன்னர்கள் கோவில் இல்லாத ஊரே இல்லை என்று கூறும்படி, ஊர்தோறும் காலத்தால் அழியாத பல கோயில்களைக் கட்டிப் புகழடைந்தனர். பழந்தமிழர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தார்கள் அவர்களது வாழ்க்கை முறை இயற்கையில் இருந்து பிரிக்க முடியாததாகக் காணப்பட்டது. இயற்கையைத் தெய்வமாக வணங்கிய தமிழர்களிடம் பஞ்சபூதங்களைப் பற்றிய தெளிவான புரிதல் இருந்தது என்பதைச் சங்ககாலம் முதற்கொண்டு அறிய முடிகிறது. பழந்தமிழர்கள் பஞ்சபூதங்களின் வடிவமாக இயற்கையைப் போற்றி வணங்கியதோடு அவற்றோடு இயைந்து பெருவாழ்வு வாழ்ந்துள்ளனர். இவ்வாறு சைவ சமய அடியார்கள் தமிழகத்திலிருந்த பஞ்சபூதத் திருத்தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்தமையையும் பஞ்சபூதத்தலங்கள் பற்றி அவர்கள் கூறும் கருத்துக்களை ஆராய்வதாகவும் இக்கட்டுரை அமைகிறது.

பஞ்சலோகம் என்பது ஐந்து உலோகங்களின் கலவை எனலாம். இது போல முக்கியமான ஐந்து கூறுகளினை ஐம்பூதங்கள் அல்லது பஞ்சபூதங்கள் என்பர். உலகத்தில் இப்பஞ்சபூதங்கள் ஐந்து. அவை நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம். உடலில் பஞ்சபூதங்களும் ஐந்து. அவை மெய், வாய், கண், மூக்கு, செவி. இந்த தத்துவத்தின் அடிப்படையில் பஞ்சபூதங்கள் ஒளி பெற்றுச் சிறப்படைய வேண்டும் என்பதற்காக கோவில் வழிபாடுகளில் ஐந்து முக விளக்குகள் ஏற்றுவதையும், தீபாராதனைகள் நடைபெறுவதையும் காணமுடிகிறது.

## சைவ வழிபாடு

மனிதனின் வாழ்க்கையானது பதி (கடவுள்), பசு (உயிர்), பாசம் (பற்று) என்ற மூன்றின் சேர்க்கையால் ஆனது. இதனை கடந்து நிற்கும் நிலையே ஞானம் எனப்படுகிறது. இந்த ஞானமே சைவ வழிபாட்டின் தனித்துவப் பண்பாகக் கருதப்படுகின்றது. சைவ வழிபாட்டிற்கு ஆதார நூலாக திகழ்ந்து கொண்டிருக்கும் சிவாகமங்கள் இந்த ஞானம் பற்றிய விளக்கத்தை முதலில் வைத்து கடவுள் வழிபாட்டு விதிமுறைகளைத் கூறுகின்றன. சைவ வழிபாட்டுத் தலமான ஆலயமும் ஞானி ஒருவரின் உடல் அமைப்பு மாதிரியாக உருவமைக்கப்பட்டு விழுந்து வணங்குதல் முதலாக பூசை செய்தல் வரை இந்த ஞான பின்னணியில் அமைக்கப்பட்டிருக்கின்றது. சிவமே முதல் எனக் கருதிச் செய்யப்படும் அனைத்தும் சிவ புண்ணியமாகக் கருதப்படுகின்றது. சைவ உலகில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகரை முதன்மையாகவும், சைவசமயக்குரவர்களாகவும் போற்றப்படுவது சிறப்புக்குரியவையாக கருதப்படுகிறது.

## பஞ்சபூதத் திருத்தலங்கள்

பஞ்சபூதத் திருத்தலங்கள் சிவபெருமானை பஞ்சபூதங்களின் வடிவில் வழிபாடு செய்யும் இடங்களைக் குறிக்கின்றது. சிவனை பஞ்சபூத வடிவங்களாகக் அமைந்து வருவதை "நிலமாகக் காஞ்சிபுரம், திருவாரூர் ஏகாம்பரநாதர் கோவிலிலுள்ள பிருத்வி மணல்லிங்கத்தையும், நீராக திருவானைக்கா ஜம்புகேசுவரர் கோயிலிலுள்ள ஜம்புலிங்கத்தையும், காற்றாக திருக்காளத்தி காளத்தீசுவரர் கோயிலிலுள்ள வாயு லிங்கத்தையும், நெருப்பாக திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலிலுள்ள அக்னி அல்லது சோதி லிங்கத்தையும், ஆகாயமாக சிதம்பர நடராசர் கோயிலிலுள்ள ஆகாச லிங்கத்தையும் வைத்து பஞ்சபூதத்தல வழிபாட்டு முறைகளாகப் பின்பற்றப்படுகிறது" (Madhavan, 1995).

## பஞ்சபூதங்களாகத் திகழும் இறைவன்

பஞ்சபூதங்களாக இறைவன் திகழ்கின்றான் என்று சைவ அடியார்கள் தம் பாடல் வழியாக மொழிகின்றனர். பஞ்சபூதங்களின் தன்மைகளை பற்றி மாணிக்கவாசகர்,

“தீயில் வெம்மை செய்தோன் பொய்தீர்

வானிற் கலப்பு வைத்தோன் மேதகு

காலின் ஊக்கங் கண்டோன் நிழல்திகழ்

நீரில் இன்சுவை நிகழ்த்தோன் வெளிப்பட

மண்ணில் திண்மை வைத்தோன்”

என்று திருவாசகத்தில் குறிப்பிடுகிறார் (Vellaivarananan, 1969). பஞ்சபூதங்களையும் அவற்றின் இயல்புகளையும், அவ்வியல்களை அவற்றில் அமைத்தவன் இறைவனே என்பதை விளக்கி, பஞ்சபூதங்களோடு இறைவனையும் இணைத்துக் கூறுவதை அறிய முடிகிறது.

பஞ்சபூதங்களின் குணங்களாகத் திகழும் இறைவனைத் திருநாவுக்கரசர்,

“மண்ணதனில் ஐந்தை மாநீரில் நான்கை

வயங்கெரியில் மூன்றை மாருதத்து இரண்டை

விண்ணதனில் ஒன்றை”

என்று நிலத்துக்கு ஐந்தும், நீருக்கு நான்கும், நெருப்புக்கு மூன்றும், காற்றுக்கு இரண்டும், ஆகாயத்திற்கு ஒரே குணமென்று பஞ்ச பூதங்களின் குணங்களாக இறைவன் திகழ்கின்றான் என்று போற்றிப்பாடுகின்றார் (Murali, 2008).

 DOI: 10.34256/irjt22s61

காரைக்கால் அம்மையார் தம் பாடற்திறத்தாலும் இறைவனை பஞ்சபூதங்களோடு ஒப்பிட்டு கூறுகின்றார். அட்டமூர்த்தியானவன் என்பதை,

"அவனே இருசுடர் தீ ஆகாசமாவான்

அவனே புவிபுனல் காற்றாவான் - அவனே

இயமானனாய் அட்ட மூர்த்தியுமாய் ஞான

மயமாகி நின்றானும் வந்து"

என்ற பாடலில் பஞ்சபூதங்களாக கலந்து இருப்பவன் இறைவன் ஒருவனே என்று கூறுவதன் வாயிலாக இறை சக்தியின் ஆற்றல் நமக்கு உணர்த்தப்படுகிறது (Kathir Murugu, 2007).

## பஞ்சபூத வழிபாட்டு தலங்கள்

பஞ்சபூதத் திருத்தலங்கள் என்பவை சிவபெருமானை பஞ்சபூதங்களின் வடிவில் வழிபாடு செய்யும் இடங்களைக் குறிக்கும். நிலம் (பிரித்வி), நீர் (அப்பு), காற்று (வாயு), நெருப்பு (தேயு), ஆகாயம் (ஆகாசம், வானம்) ஆகியவைகளே பஞ்சபூதங்கள் என்றழைக்கப்படுகின்றன. பஞ்சபூதங்களே உலகில் உள்ள எல்லா உயிரினங்கள் உருவாக்கத்திற்கும், வாழ்க்கை மற்றும் அழிவு ஆகியவற்றிற்கு மூல ஆதாரமாக விளக்குகின்றன. இந்த பஞ்சபூத சக்திகள் ஒவ்வொன்றினையும் கொண்டு கோவில்களை உருவாக்கி வழிபாடு மேற்கொள்ளப்பட்டது. இத்தகைய வழிபாட்டு முறைகளைப் பஞ்சபூதத் தலங்கள் வாயிலாக பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

## நிலத்தலம்

பஞ்சபூதத் தலங்களுள் நிலத்திற்குரிய தலங்கலாக காஞ்சிபுரம் மற்றும் திருவாரூர் ஆகிய இரண்டு தலங்களம் கூறப்பெற்றுள்ளன. காஞ்சிபுரத்தில் காமாட்சி அம்மையும், ஏகாம்பர நாதரையும் திருவாரூரில் தியாகராசப் பெருமானையும் பிரதானமாக நம் முன்னோர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

"அம்மை பற்றிக் காஞ்சியும் அப்பனை எண்ணி

ஆரூரும் கூறப்பெற்றதாக உணரலாம்" என்பர்

காஞ்சி மாநகரையும், ஏகாம்பரர் இறைவனையும் பெருமையாக எடுத்தியம்புகின்றார் (Arivoli, 2011).

இறைவன் உமையம்மைக்கு மாமரத்தின் கீழ் காட்சி கொடுத்ததால், 'ஏகாம்பரர்' என்னும் பெயர் கொண்டுள்ளார். ஏகாம்பரம் ஏக ஆம்பரம் ஒற்றை மாமரம், ஏகாம்பரம் என்பது ஏகம்பம் என மருவியது. மூலவர் லிங்க வடிவில் உள்ளார். உயர்ந்த லிங்க பாணம் கூரான முனைப்புடனும் சில சுவடுகளுடனும் காணப்படுகிறது. உமையம்மை மணலால் பிடித்த லிங்கம் என்பதால், பாணத்துக்கு மஞ்சள் நீராட்டு கிடையாது. வாசனைத் திரவியமாக புனுகுச் சட்டம் சாத்தப்படுகிறது.

இத்தலம் தேவார மூவர்களாலும் பாடப்பட்டது. இப்பதியையும் இறைவனையும் திருஞானசம்பந்தர்,

"வழுவாமே மல்குசீரால் வளர் ஏகம்பம்

தொழுவாரே விழுமியார் மேல்வினை துன்னாமே"

என்ற பாடல் அடிகள் வாயிலாக இறைவனை தொழுதோம் என்றால் துன்பங்கள் எல்லாம் நம்மை விட்டு நீங்கும் என்று குறிப்பிடுகின்றார் (Murali, 2008).

திருநாவுக்கரசர் இறைவனை தன் மனதில் இருத்திக் கொண்ட முறைமையினை,

"அரவாடச் சடைதாழ வங்கையினி லனலேந்தி

இரவாடும் பெருமானை என் மனத்தே வைத்தேனே"

என்ற பாடல் வரிகள் வாயிலாக சிவபெருமான் உணர்தற்கு அரியவன். அடியார்கள் உள்ளத்தில் இருப்பவன். அரவத்தையும், உள்ளங்கையில் தீயினை ஏந்திக் கூத்தாடும் தன்மையன். அத்தகையவனை மனத்தில் நிலையாக வைத்தால் நிறைவான அருளை தருவான் என்று தெளிவு படுத்துவதை அறியமுடிகிறது (Murali, 2008).

சுந்தரரும் மனதை அடக்கி மலர்கள் கொண்டு வழிபட்டால் இறைவனின் இயல்பு நிலையை கண்டறியலாம் என்று தம் பாடலில் தெளிவுபடுத்துகிறார். இதனை,

'அற்ற மில்புக ழாள்உமை நங்கை

ஆதரித்து வழிபடப் பெற்ற

கற்றை வார்சடைக் கம்பன் எம்மானைக்

காணக் கண்அடியேன் பெற்றவாறே"

என்ற வரிகளில் இறைவனை போற்றும் விதத்தினை கண்டறிய முடிகிறது (Murali, 2008).

திருவாரூர் தலம் சப்த விடங்கத் தலங்களுள் ஒன்று. விடங்க என்றால் கை புனையாது தோன்றியது என்று பொருள். இங்கு எழுந்தருளியிருக்கும் விடங்கப்பெருமான் சிற்பங்களின் உளியால் செதுக்கப்படாதவர் ஆவர். பாற்கடலில் பள்ளிகொண்ட திருமால் தன் மார்பில் சோமா சுகந்த மூர்த்தியை வைத்து வணங்குவதாக குறிப்பிடப்படுகிறது.

சோழநாட்டுச் சிவத்தலங்களில் மிகத் தொன்மையானதும், பெருமை வாய்ந்ததுமான ஊராக திருவாரூர் திகழ்கின்றது. இந்த திருவாரூர் தலத்தின் தொன்மையினையும், இறைவனின் அற்புதத்தினையும் திருநாவுக்கரசர் தம் பாடல்களில் எடுத்தியம்புகிறார். இதனை,

"மாடமொடு மாளிகைள் மல்கு தில்லை

மணிதிகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை

ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ

அணியாரூர் கோயிலாகக் கொண்ட நாளே"

என்ற பாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றது (Murali, 2008).

திருவாரூர் திருக்கோயிலைச் சுற்றி ஏழு கோபுரங்களும் மூன்று பிரகாரங்களும் உள்ளன. கோயிலின் முதல் திருச்சுற்றில் உள்ள புற்றிடங்கொண்டார் கருவறையை திருமூலட்டானம் என்று வழங்குவர். 'கோயில்' என்றால் தில்லையைக் குறிப்பது போல திருமூலட்டானம் என்றால் திருவாரூரைக் குறிக்கும். இங்குள்ள இறைவனான தியாகராஜரின் பாதங்கள் ஆண்டுக்கு இரண்டு தினங்களில் தவிர, மற்ற நாட்களில் மலர்களால் மூடப்பட்டு, பங்குனி உத்திரம் நடைபெறும் சமயத்தில் இடது பாதத்தையும், திருவாதிரை திருவிழா சமயத்தில் வலது பாதத்தையும், பக்தர்கள் தரிசனம் செய்து வழிபடும் முறை காணப்படுகின்றது. இத்தலத்தில் உள்ள இறைவனை சமய குரவர்களின் மூவர் புகழ்ந்தேத்தி பாடியிருக்கின்றனர்.

## நீர்த்தலம்

உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாக நீர் விளங்குகிறது. நீரை தலமாகக் கொண்டு திருவாடனை என்னும் தளம் அமைந்துள்ளது. யானை வழிபட்டதால் ஆனைக்கா என்றும், நாவல் மரத்தடியில் சிவபெருமான் எழுந்தருளியிருப்பதால் சம்புகேசுவரம் என்றும் பெயர்பெறுகின்றது.

திருக்கயிலாயத்தில் புஸ்பதந்தன் மால்யவான் என்ற இருகணநாதர் தொண்டாற்றுவதில் யார் சிறந்தவர் என்ற போட்டியிட்டு, சபித்து யானையாகவும், சிலந்தியாகவும் மாறி திருவானைக்கா என்ற இடத்தில் சிவபெருமானுக்கு தொண்டு புரிந்து வழிபட்டு நற்கதி அடைந்தனர். யானை கணநாதனாகவும்,

சிலந்தி கோச்செங்கட் சோழனாக பிறந்து சிவனுக்கு மாடக் கோயில் எடுத்ததைப் பற்றி பெரியபுராணத்தில்,

"ஆனைக் காவல் தாம் முன்னம்

அருள் பெற்றதனை அறிந்தாங்கு

பானற் களத்துத் தம் பெருமான்

இருமங் கோயில் பணி அமைத்தார்"

என்று குறிப்பிடுகின்றது (Vellaivarananan, 1969).

## இறைவனைப் போற்றுதல்

திருவானைக்கா தலத்தில் வெண்நாவல் மரத்தடியில் இறைவன் வீற்றிருக்கும் செய்தியினை திருஞானசம்பந்தர்,

"மண்ணது வுண்டரி மலரோன் காணா

வெண்ணாவல் விரும்பு மயேந்தி ரரும்"

என்று பாடியுள்ளதைக் காணமுடிகிறது (Vellaivarananan, 1969).

உலகில் அவ்வப்பொழுது மக்கள் வாழ்வில் ஏற்படுகின்ற பேரிடர்களை நீக்கி அருள்செய்து காப்பது இறையருளே என்பதனை உணர்ந்து வாழும் நிலையாக சுந்தரர்,

"மறைக ளாயின நான்கும் மற்றுள பொருள்களும் எல்லாத்

துறையுந் தோத்திரத் திறையுந் தொன்மையும் நன்மையுமாய்

அறையும் பூம்புனல் ஆனைக் காவுடை ஆதியை நாளும்

இறைவன் என்றடி சேர்வார் எம்மையு மாளுடையாரே"

என்ற பாடல் வரிகளில் ஐம்பெரும் பூதங்களில் மாறுதலால் பேரழிவுகள் தோன்றி அச்சத்தை உண்டாக்கும் முறையினை இறைவனால் மட்டுமே நீக்க முடியும். அதனால் இறைவனை போற்றி துதிக்க வேண்டும் என்று அறிவிப்பதை உணர முடிகிறது (Murali, 2008).

## காற்றுத்தலம்

திசைகளின் தன்மைக்கு ஏற்ப பலவிதமாக வீசும் காற்றைத் தலமாக கொண்டு திருக்காளத்தில் இறைவன் வீற்றிருக்கின்றான்.

"சீ, காளம், அத்தி என்ற மூன்று சொற்களும் சேர்ந்து சீகாளத்தி என்றாயிற்று. அவற்றுள் சீ என்பது சிலந்தியும், காளம் என்பது பாம்பும், அத்தி என்பது யானையும் இவை மூன்றும் திருகாளத்தி நாதனைப் பூசித்து முத்தி பெற்ற காரணத்தால் சீகாளத்தி ஆயிற்று" என்று பெயர்க்காரணம் கூறப்படுகிறது (Pulavar Sendurai Muthu, 1985).

## இறைவழிபாடு

காளத்தி நாதரை சாளரம் வழியாக வணங்குவதற்கு, எள்ளை நன்கு தூளாக்கி தண்ணீர் விட்டுப் பிசைந்து அதையே அகல் விளக்கு போன்று செய்து எண்ணெய் ஊற்றி தீபம் ஏற்றுவர். அகல்விளக்கும் சேர்ந்து எரிந்து போகும். அந்தக்கரியை எடுத்து இறைவனுக்குக் கறுப்புத்திலகம் அணிவிப்பது சிறப்பாகக் கருதப்படுகிறது. இத்தலத்தில் உள்ள இறைவன் என் கண்ணுக்குள் இருக்கிறான் என்ற செய்தியினை திருநாவுக்கரசர்,

"கற்றூண்காண் காளத்தி காணப் பட்ட

கணநாதன் காண் அவனென் கண்ணு ளானே"

என்ற வரிகளில் எடுத்தியம்புகிறார் (Murali, 2008). இறைவன் தனக்காக எதையும் சேர்த்து வைக்காதவன். மாணிக்கத் திருமேனியாக இருக்கின்றான் என்றும் சித்தரிக்கின்றார்.

காளத்தி மலையையும், அங்குறைகின்ற இறைவனையும் திருஞானசம்பந்தர் போற்றி புகழ்கின்றார். இதனை,

"சந்தமார் அகிலொடு சாதிதேக் கம்மரம்

உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்

மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி

எந்தையார் இணையடி என்மனத் துள்ளவே"

என்ற பாடல் வரிகளில் இறைவன் மனத்துள்ளே வீற்றிருப்பதை உணர முடிகிறது (Vellaivarananan, 1969).

"செண்டா டும்விடையாய் சிவனே என் செழுஞ்சுடரே

வண்டா ருங்குழலாள் உமைபாகம் மகிழ்ந்தவனே"

என்று சுந்தரர், காளத்தி மலை இறைவனைப் போற்றி துதிப்பதை அறிய முடிகிறது (Vellaivarananan, 1969).

## நெருப்புத் தலம்

பஞ்சபூதத் தலங்களில் அக்கினித் தலமாக விளங்குவது திருவண்ணாமலை, மாலும், அயனும் அடி முடியை காண முடியா தன்மையாக விளங்கி நின்றவனும் அண்ணாமலையானே ஆகும். இறைவன் அழ லருவாய் நின்றதால் இத்தலம் அண்ணாமலைத் தலமானது. இதனை ஞானசம்பந்தர்,

"அளவாவண மழலாகிய வண்ணாமலை யண்ணல"

என்று குறிப்பிடுகின்றார் ((முரளி, 2008).

சிவபெருமான் 'அரியரன்' என விளங்கும் திருவருள் திறத்தினை,

"எரியலால் உருவமில்லை ஏறலால் ஏறவில்லை

கரியலாற் போர்வையில்லை காண்டகு சோதியார்க்கு"

என்று திருநாவுக்கரசு திருவையாற்றுத் திருபதிகத்தில் அரனும் அரியும் சேர்ந்த திருவருவமே அர்த்த நாரீசுவரர் என்றும் சோதியின் ஒளியாக திகழ்கின்றார் என்று கூறுவதைக் கருதுமுடிகிறது (Vellaivarananan, 1969). இறைவனின் தோற்றப் பொலிவையும், இறைவனைப் போற்றுவதற்கு சொற்கள் இல்லை, இறைவன் உயிர்களின் தோற்றம் முதலாக அனைத்துமாக விளங்குபவன் என்று திருநாவுக்கரசர் மொழிகிறார். இதனை,

"அண்டனே யமரர் கோவே யணியணா மலை யுளானே

தொண்டனே னுன்னை யல்லாற் சொல்லுமா சொல்லி லேனே"

என்னும் பாடலின் வழி குறிப்பிடுகின்றார் (Vellaivarananan, 1969).

சுந்தரர் திருவண்ணாமலையாரைப் போற்றி திருப்பரங்குன்றப் பதிகத்தில் பாடியுள்ளார். இதனை,

"அண்ணாமலையேன் என்றீர் ஆரூர் உளீர்

அடிகேள் உமக் காட்செய அஞ்சுதுமே"

என்ற பாடல் வழியாக அறியமுடிகிறது (Murali, 2008). இத்தகைய திருவண்ணாமலையில் கார்த்திகை தீபத்தன்று தீபதரிசனம் செய்வது மிகச் சிறப்புடையதாகக் கருதப்படுகின்றது.

## ஆகாயத்தலம்

சிதம்பரம் பஞ்சபூதத் தலங்களுள் ஒன்று இத்தலம் ஆகாயத்தலமாக விளங்குகின்றது. இங்கு மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றுமே சிறப்புடையதாக கருதப்படுகிறது.

"தமிழகத்தில் பல நூற்றுக்கணக்கான கோயில்கள் இருப்பினும், கோயில் என்றால் அது சிதம்பரத்தையே குறிக்கும். தமிழகத்தில் உள்ள சிவன் கோயில்களுக்கெல்லாம் மூலக்கோயிலாகவும் தலைமைக் கோயிலாகவும் அமைந்து விளங்குவது தில்லைக்கோயில்" - (Pulavar Sendurai Muthu,1985)

இவ்வாறு சைவப் பெருமக்களுக்குக் சிதம்பரக் கோயிலானது பல ஆன்மீகச் சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதை அறியமுடிகிறது.சைவ நாயன்மார்களுள் காரைக்காலம்மையாரும், திருமூலரும் காலத்தால் முற்பட்டவர்கள். திருமூலர் தில்லைக் கூத்தனின் ஆனந்த நடனக் காட்சியை,

"ஆனந்தம் ஆடரங்கு ஆனந்தம் பாடல்கள்

ஆனந்தம் ஆனந்தக் கூத்து கந் தானுக்கே"

என்று பாடிகின்றார் (Murali, 2008). ஓம் என்னும் பிரணவத்தின் வடிவமாக நின்று நாதாந்தக்கூத்தரும், நடராசப் பெருமானாகவும் விளங்குபவர் இறைவன் என்று கூறுகின்றார்.

பஞ்சபூதங்களின் குணங்களாக இறைவன் இருப்பதை திருநாவுக்கரசர்,

"ஓதினார் வேதம் வாயா லொளிநிலா வெறிக்குஞ் சென்னி

பூதனார் பூதஞ் சூழப் புலியுரி யதள னார்தாம்"

என்ற பாடல் வழியாக சிவபெருமான் தில்லையில் கூத்தாற்றும் தன்மையாகவும், ஐம்பூதங்களாகவும் திகழ்கின்றார் என்பதை அறிய முடிகிறது (Vellaivarananan, 1969).

தில்லையில் நடராசர் ஆடிய தாண்டவம் ஆனந்த தாண்டவம். இதனை,

"ஆனந்தக் கூத்தன் அருள்பெறில் நாம் அவ்வண்ணமே

ஆனந்தம் ஆகி நின்று ஆடாமோ தோனோக்கம்"

என்று மாணிக்கவாசகர் இறைவனின் ஆனந்த நடனத்தை எடுத்தியபுகிறார் (Vellaivarananan, 1969).

இவ்வாறு சைவ அடியார்கள் சிவநெறியை வளர்த்து வந்த தலமாகவும், இத்தலத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானின் பெருமைகள் உலகெங்கும் பரவுவதாக எனவும் கூறப்படுவது சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது.

## முடிவுரை

தமிழும் சைவமும் இரண்டறக் கலந்தவை. தமிழரின் தொன்மைச் சமயம் என்று சைவம் பேசப்படுகிறது. இத்தகைய பழைமையும், பெருமையும் பெற்று விளங்கிய சைவ சமயம் சிவபெருமானை வழிபடு கடவுளாகக் கொண்டு காணப்பட்டது. சிவம் என்றால் செம்மை, நன்மை என்று பொருளாகும். அன்பை வளர்த்ததால் சிவம் அன்பே சிவமாயிற்று சிவனது அருள்பெற்ற அடியார்கள் பதிகத்தின் வாயிலாக இறைவனை பாடித் துதித்த செய்தியினை அறியமுடிகிறது. இயற்கைச் சூழலை ஐந்து நிலைகளாகக் கண்டு பஞ்சபூதங்களாகக் கருதி சிவனுடன் தொடர்புடையதாகக் கொண்டு சைவ அடியவர்கள் திருக்கோயில்களில் தன்னுடைய திருப்பணியைச் செய்து சமய வழிபாடுகளையும், பண்பாட்டுப் பணிகளையும் செய்து வந்ததை அறிய முடிகிறது. தமிழிசையுடன் கலந்த பக்திப்பாடல்களை இயற்றி பண்களுடன் பாடி, மக்களையும் பாடச் செய்து திருக்கோயில்களைக் கலைக்

கூடாரமாக அமைத்ததை உணர முடிகிறது. இவ்வாறு சைவ அடியார்கள் பஞ்சபூதத் தல வழிபாட்டு முறைகளை செவ்வண்ணமே சீரும் சிறப்புமாக செய்து வந்ததை இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது.

## References

Arivoli, A., (2011) Panchabootha Sthalangal, Manivaasagar Pathippagam, Chidambaram, India.

Kathir Murugu, (2007) Arputha Thiruvandhathi Moolamum Uraiyum, Saratha Pathippagam, Chennai, India.

Madhavan, V, R., (1995) Tamilil Thala Puranam, Paavai Publications, Thanjavur, India.

Murali, G, S., (2008) Panniru Thirumurai moolamum uraiyum, Saratha Publications, Chennai, India.

Pulavar Sendurai Muthu, (1985) Thirumurai Thiruthalangal, Manivaasagar Pathippagam, Chidambaram, India.

Vellaivarananan, K., (1969) Panniru Thirumurai Varalaru, Annamalai University, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License